எம்பெருமானர் — ஸ்ரீபெரும்பூதூர்

(தாமுகந்த திருமேனி)

★

அடுத்து, திருச்சி வானொலி நிலயத்தில் ஸுதர்ஶனம் ஆசிரியர் நிகழ்த்திய "ராமாநுஜநெறி" என்னும் சொற்பொழிவு (ஸுதர்ஶனம் 357 பிங்கள வருஷம் ஆவணி மாத இதழில் வெளிவந்தது) பொன்விழா மலரில் அநுபந்தமாக இணைக்கப்படுகிறது.

http://acharya.org

ஸ்ரீ:

ராமாநுஜ நெறி

[ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்,
'ஸுதர்சனம்' ஆசிரியர், 3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.]

1. முன்னுரை

இப்போது நடக்கும் பிங்கள வருஷத்திற்கு 960 வருஷங்களுக்கு முற்பட்ட (கி. பி. 1017) பிங்கள வருஷத்தில் சித்திரை மாதத்தில் சுக்லபக்ஷ பஞ்சமியில் திருவாதிரை நட்சத்திரத்தில் வியாழக்கிழமையன்று ஸிம்ஹ லக்னத்தில் பிற்பகலில் ஸ்ரீ பெரும்பூதூரில் அவதரித்து, விசிஷ்டாத்வைத ஸ்ரீ வைஷ்ணவ மதத்தை நிலைநாட்டி, 120 வருஷங்கள் நிறை வாழ்வு வாழ்ந்து, அதே பிங்கள வருஷத்தில் (கி. பி. 1137ல்) மாசி மாதத்தில் சுக்லபக்ஷ தசமியில் திருவாதிரை நட்சத்திரத்தில் சனிக்கிழமையன்று நடுப்பகலில் ஸ்ரீரங்கத்தில் திருநாட்டை அலங்கரித்தவர் ஸ்ரீராமாநுஜர்.

தொன்மையான வேதநெறிக்கு மூன்று வகையான விளக்கங்களை வெளியிட்டவர்கள் ஆதிசங்கரர், ஸ்ரீராமாநுஜர், ஸ்ரீமத்வர் என்னும் மூன்று ஆசார்யர்கள். இவர்கள் (முறையே) கேரளத்திலும், தமிழ்நாட்டிலும், கன்னட நாட்டிலும் பிறந்து நிலைநாட்டிய அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் என்னும் மூன்று நெறிகளும் இன்றும் பாரததேசம் முழுவதிலும் லக்ஷக் கணக்கான மக்களால் பின்பற்றப்படுகின்றன. இவர்களில் ஸ்ரீராமாநுஜரே தமிழ்நாட்டில் அவதரித்தவர். சான்றோருடையதாகப் புகழ்பெற்ற தொண்டைமண்டலத்தைச் சேர்ந்த ஸ்ரீ பெரும்பூதூரில் ஸ்ரீ கேசவஸோமயாஜியாருக்கும், பூமி தேவிக்கும் தனிப் புதல்வராகத் தோன்றியவர் ஸ்ரீராமாநுஜர். தமிழ்நாட்டில் பரம வைதிக குடும்பத்தில் பிறந்தமையால், வடமொழி வேதங்களையும், தென்மொழி வேதங்களாகிற ஆழ்வார்களின் அருளிச்செயல்களையும் ஒருமைப்படுத்தி, சங்க காலம் முதலாகவே தமிழ்நாட்டில் விளங்கிவந்த இருமொழி ஒருமைப்பாட்டு நெறியான விசிஷ்டாத்வைத வைணவ நெறியை நிலைநாட்டினார் ஸ்ரீராமாநுஜர். இம்முறையில் தென்னாட்டுக்கும், வடநாட்டுக்கும், தென்மொழிக்கும், வடமொழிக்கும் ஒருமைப்பாட்டின் முழு உருவமாக விளங்குகிறார் இப்பெரியவர்.

இவரது கொள்கைகளைச் சுருங்கக் கூறுவோம் இனி. உலகிலுள்ள எல்லாப்பொருள்களும் சித், அசித், ஈச்வரன்

http://acharya.org

எனும் மூன்று வகையில் அடங்கும். இவற்றில் 'சித்' அல்லது 'சேதனம்' என்பது அறிவுள்ள ஜீவர்கள். 'அசித்' அல்லது 'அசேதனம்' என்பது அறிவற்ற பொருள்கள். சேதனரான ஜீவர்களும் கணக்கற்றவர்கள். அசேதனமான பொருள்களும் கணக்கற்றவைகள். உண்மைப் பொருள்களான இவையனைத்தையும் என்றும் தன்னைவிட்டுப் பிரியாத சரீரமாகக் கொண்டவனாயிருக்கும் ஸ்ரீமந்நாராயணனே ஈச்வரன் எனப்படும் பரம் பொருள். ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்கள் கொண்ட மூலப்ரக்ருதியென்னும் அசேதனப்பொருளின் விகாரமான இவ்வுலகம் அந்த நாராயணனால் அவ்வப்போது ஆக்கி அளித்து அழிக்கப்பட்டு, அவனது அளவிலா விளையாட்டுக்கு இலக்காவதால் லீலாவிபூ₄தி எனப்படுகிறது. இதில் உள்ள ஜீவர்கள் புண்யபாபங்களால் கட்டுப்பட்டவர்களாகையால் ப₃த்₃த₄ர் எனப்படுவர். என்றும் உள்ளதாய், (ரஜோகுணமும், தமோகுணமும் கலக்காத) சுத்தஸத்வகுணமுடைய பரமபதம் என்னும் ஸ்ரீவைகுண்டம்—அவனுக்கு என்றும் ஆட்பட்டிருக்கும் அளவற்ற நித்யஸூரிகளாலும், இந்த லீலாவிபூ₄தியிலிருந்து ஒருகாலத்தில் முக்திபெற்ற அளவற்ற முக்தர்களாலும் நிறையப் பெற்றிருக்கையால், நித்யவிபூ₄தி என்று புகழ்பெற்றிருக்கிறது. விபூ₄தி எனும் சொல் செல்வம் என்று பொருள்படும். இவ்விரு உலகங்களும் பரமாத்மாவான நாராயணனுடைய செல்வமாகையாலே உப₄யவிபூ₄திகள் எனப்படுகின்றன.

லீலாவிபூ₄தியிலுள்ள ப₃த்₃த₄சேதனர் நித்யவிபூ₄திக்குச் சென்று ஸ்ரீமந்நாராயணனை அனுப₄வித்து ஆட்செய்வதே 'பரம மோக்ஷம்' என்று வடமொழி சாஸ்திரங்களிலும், 'நல்வீடு' என்று ஆழ்வார்களாலும், "வீறுபெறுதுறக்கம்" என்று சங்ககாலத் தமிழர்களாலும் குறிக்கப்படுகிறது. ஜீவர்கள் இவ்வீடு பேற்றை அடைவதற்கு அறியவேண்டியவை ஐந்து விஷயங்கள்:— (1) எல்லாவுலகையும் உடையவனாகிய இறைவனைப்பற்றிய உண்மையாகிற இறைநிலை (2) அவனுடைய உடைமைகளில் உயர்ந்த ஜீவர்களாகிற நம்மைப்பற்றிய உண்மையாகிற உயிர்நிலை. (3) நல்வீடுபெற்று நாம் அடையும் பயனாகிய வாழ்வு. (4) இவ்வாழ்வை அடைவதற்கு உபாயமாகிற நெறி. (5) இதுகாறும் நாம் இவ்வாழ்வை அடையத் தடையாயிருந்த தடைகள். இவ்வைந்து விஷயங்கள் பற்றியும் ஸ்ரீராமாநுஜர் காட்டும் நெறிகளை அடுத்த ஐந்து உரைகளில் விளக்குவோம்.

http://acharya.org

2. இறைநிலை

ராமாநுஜநெறியில் இறைவனின் நிலை விளக்கப்படுகிறது. இறைவனாகிற ஸ்ரீமந்நாராயணன் தாழ்வுகள் அனைத்துக்கும் எதிர்த்தட்டானவன். நற்குணங்கள் அனைத்துக்கும் கொள்கலமானவன். தன்னிலும் வேறுபட்ட எல்லாச் சேதனரையும், அசேதனப்பொருள்களையும் தன்னைவிட்டுப் பிரியாத சரீரமாகக் கொண்டிருக்கையால், எல்லாம் தானே என்றும் சொல்லலாம்படியிருப்பவன். ஆயினும், சரீரமாயிருக்கும் அவற்றின் தாழ்வுகளால் தீண்டப்படாதவனாயிருப்பவன். எல்லாக் காலத்திலும் எல்லா இடங்களிலும் வியாபித்திருப்பவன். அறிவும் ஆனந்தமுமே வடிவாயிருப்பவன். இயல்வானவையாய், எல்லையற்றவையான அறிவு, பலம், ஈச்வரத்தன்மை, வீர்யம், சக்தி, தேஜஸ்ஸு, நீர்மை, அன்பு, மென்மை, நேர்மை, உயிர்களிடத்து நட்பு, நடுநிலைமை, கருணை, இனிமை, கம்பீரத்தன்மை, வண்மை, திறமை, நிலையுடைமை, தீரத்தன்மை. சூரத்தன்மை, பராக்ரமம், வேண்டத்தக்கதெல்லாம் பெற்றிருக்கை, நினைத்ததெல்லாம் நடத்தும் வல்லமை, அடியார்களது கார்யம் தன் பேறாயிருக்கை, அவர்களிடத்துச் செய்ந்நன்றி மறவாமை முதலான கணக்கற்ற கல்யாணகுணங்களை உடையவன். இக்கல்யாணகுணங்களை வெளிப்படுத்துவதற்காகவே கணக்கற்ற திருமேனிகளைக் கொண்டிருப்பவன். தனக்கினியதாய், தக்கதாய், காலத்தால் வேறுபடாததாய், நினைத்தற்கரியதாய், அப்ராக்ருதமான சுத்தஸத்வப்பொருளால் ஆனதாய், எப்போதுமிருப்பதாய், குற்றமற்றதாய், ஒப்பற்ற ஒளியுடையதாய், அவயவ அழகு, மேனியழகு, நறுமணம், மென்மை, நித்ய யௌவனப்பருவம் முதலிய கணக்கற்ற குணங்களுக்குக் கொள்கலமாயிருப்பது இவன் திருமேனி. கர்மம் காரணமாக ஏற்படும் ப்ராக்ருதமான அழுக்குடம்புகளைக் காட்டிலும் மிகவும் வேறுபட்டதாய், அடியார்க்கு அருள்புரிவதற்காக ஈச்வரனால் விரும்பியே ஏற்றுக்கொள்ளப்பட்டதாய், அப்ராக்ருதமாயிருப்பது இவனுடைய பரஞ்சோதியுருவம். அத்திருமேனியில் மிக அழகிய பல திருவாபரணங்களும், சங்கம் சக்ரம் முதலான திவ்யாயுதங்களும் உள. சேதனரை ஈச்வரனோடு சேர்த்துவிடுவதையே இயல்வாக உடையவளாகையாலே சேதனர் அனைவர்க்கும் தாயாய், நாராயணனுக்கு என்றும் ஆட்பட்டிருக்கையாலே அவனுக்கு அப்ராக்ருத பத்னியாயிருக்கும் லக்ஷ்மீதேவியையும், அவளுக்கு ஆட்பட்ட பூமிதேவி முதலானவர்களையும் திவ்யமஹிஷிகளாக உடையவன். பரமபதத்தில்

http://acharya.org

இவ்விறைவனுக்கே என்றும் ஆட்செய்து வாழும் ஆதிசேஷன், கருடன் முதலான கணக்கற்ற நித்யஸூரிகளையும், முக்தர்களையும் உடையவன். இத்தகைய பெருமையுடையவனாய், பரமபதம் என்றும், வைகுண்டம் என்றும் வேத, வேதாந்தங்களில் புகழப்படும் மேல் எல்லையற்ற அப்ராக்ருத நித்ய விபூதியிலிருந்துகொண்டு — அவ்வுலகத்தையும், ப்ராக்ருதமாய், ப்ரக்ருதி, புருஷர்கள் எனப்படும் ஜீவர்கள், காலம் என்னும் மூவகைத் தத்துவங்கள் அடங்கிய கீழ் எல்லையற்ற லீலாவிபூதியான இவ்வுலகத்தையும் ஆட்சிசெலுத்திக்கொண்டிருப்பவன். இவ்வுலகில் கர்மத்தால் கட்டுப்பட்டுக் கிடக்கும் சேதனரை ஆட்கொண்டு அவ்வுலகிற்கு அழைத்துச் செல்வதற்காக வேதம் முதலான சாஸ்திரங்களை அளித்து, ராமன், கிருஷ்ணன் முதலான கணக்கற்ற அவதாரங்களையும் எடுப்பவன்; கோயில்களில் அர்ச்சாவதாரமாகவும் எழுந்தருளியிருப்பவன். ஆழ்வார்கள், ஆசார்யர்கள் போன்ற ஞானிகளையும் அவதரிக்கச்செய்பவன். இவ்வுலகிற் சேதனரைத் திருத்தி ஆட்கொள்வதற்காகவே சோம்பாமல் இவ்வுலகைப் படைத்து, ரக்ஷித்து, அழித்துக்கொண்டும், அவதரித்து அருஞ்செயல்களைப் புரிந்துகொண்டுமிருப்பவன். இப்படி இவன் செய்வதற்குக் காரணம் அனைத்துலகிற்கும் ஸ்வாமியாய், ஆதாரமாய், நியமிப்பவனாய், ரக்ஷகனாயிருக்கையேயாகும். மிகுந்த ஜ்ஞாநசக்திகள் படைத்த பிரமன், சிவன் முதலான தேவர்களும் இவனால் படைத்து, அளித்து அழிக்கப்படும் ஜீவர்களே. ஒத்தாரும் மிக்காரும் இல்லாத ஆதியஞ்சோதியாயிருப்பவனிவன். நாராயணன், விஷ்ணு, ஹரி, அநந்தன் முதலான கணக்கற்ற பெயர்களை உடையவனிவன். உண்மையில் உலகில் உள்ள எல்லாப் பொருள்களின் பெயர்களும், அவற்றுக்கு அந்தர்யாமியான இவனுடைய பெயர்களுமாகும். ஆகையால் எந்தப் பெயராலும் வேதங்களும், ஞானிகளும் இவனைக் குறிப்பர். தன்னால் படைக்கப்பட்ட பொருள்களுக்குத் தன்னுடைய பெயர்களில் சிலவற்றைக் கொடுத்திருக்கிறான் இவன். ஆயினும் நாராயணன் முதலான ஆயிரக்கணக்கான நாமங்களைத் தன் தனிப்பெயர்களாக வைத்துக்கொண்டுமிருக்கிறான். அதனாலேயே இப்பெயர்களால் இவனை அழைப்பதில் ஞானிகள் ஆர்வங்கொண்டிருக்கின்றனர். இப்பெருமைகளையெல்லாம் இவனுக்கு வேதம் முதலான வடமொழி நூல்களும், ஆழ்வார்களின் அருளிச்செயல்களும், சங்ககால நூல்களான பரிபாடல் முதலானவையும் காட்டுகின்றபடியால் ராமாநுஜர்நெறி மிகத்தொன்மையான நெறி என்று விளங்கும்.

http://acharya.org

3. உயிர்நிலை

ராமானுஜநெறியில் உயிர்களின் நிலை விளக்கப்படுகிறது. அனைத்துயிர்களுக்கும் தந்தையாய், ரக்ஷகனாய், தலைவனாய், நாயகனாய், அறியத்தக்கவனாய், உடையவனாய், ஆதாரமாய், ஆத்மாவாய், அனுபவிப்பவனாயிருக்கும் இறைவனான ஸ்ரீமந் நாராயணனுக்குப் பிள்ளையாய், ரக்ஷிக்கப்படுபவனாய், அடியானாய், நாயகியாய், அறிபவனாய், உடைமையாய், தாங்கப் படுபவனாய், சரீரமாய், அநுபவிக்கப்படுபவனாக ஒவ்வோருயிரும் இருக்கையாலே, உயிர்கள் எனப்படும் ஜீவர்கள் அனைவரும் இறைவனோடு இத்தகைய ஒன்பது வகைப்பட்ட இயல்வான உறவுகளை உடையவர்களாயிருக்கிறார்கள். உயிர் எனப்படும் ஜீவாத்மா ஈச்வரனைப்போலவே என்றுமிருப்பவன். தேஹம், இந்திரியங்கள், மனம், ப்ராணன். எனப்படும் ஜடப் பொருள்களைக்காட்டிலும் மிகவும் வேறுபட்டதாய். அவ்வுயிர்க்கு 'நான்' 'நான்' என்று எப்போதும் தோன்றிக் கொண்டிருப்பது ஆத்மா. இவ்வாத்மா இயற்கையில் அறிவு மயமாகவும். ஆநந்தமயமாகவும் இருப்பது; எங்கும் பரவக் கூடிய அறிவை உடையது. முக்திநிலையில் இதன் அறிவு எங்கும் பரவுகிறது. ஆயினும் ப்ராக்ருதமான சரீரத்தோடு தொடர்பினால் இந்த லீலாவிபூதியிலுள்ள உயிர்களுக்கு அவரவர் செய்த பூர்வகர்மங்களால் ஏற்பட்ட உடலின் தொடர்பால் அந்த அறிவுக்கு ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன. இறைவனுக்கும், அவனடியார்க்கும் அடிமைப்பட்டிருக்கையையே இயல்வாகக்கொண்டது உயிர். நித்யமான ஆத்மாவுக்கு அநாதிகாலமாகப் பலவகைப்பட்ட சரீரங்களோடு பூர்வகர்மம் காரணமாகத் தொடர்பு ஏற்படும்போது பிறப்பும், அத் தொடர்பு அழியும்போது இறப்பும் உண்டாவதாக உலகில் வழங்கப்படுகிறது. உண்மையில் ஆத்மஸ்வரூபத்திற்குப் பிறப் பிறப்புகள் கிடையாது. ஆத்மா அணுபரிமாணமுடையதாய், உடலின் நடுவில் உள்ள ஹ்ருதயத்தில் வாழ்கிறது. கண் முதலான இந்திரியங்களுக்குப் புலப்படாததாகையாலே, பௌதிகப்பொருள்களை அறிவதுபோலே ஆத்மாவை அறிய முடியாது. அணுவாய், ஹ்ருதயத்தில் வாழ்ந்தபோதிலும், விளக்கானது ஒளியால் அறைமுழுவதும் பரவுவதுபோலே, ஆத்மாவானது தன் அறிவினால் உடல் முழுவதும் பரவிநின்று உடலில் ஏற்படும் இன்பதுன்பங்களை மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் என்னும் ஞானேந்திரியங்களின் மூலம்

http://acharya.org

உணர்கிறது. முதலிற்கூறிய ஐந்து ஞானேந்திரியங்களோடும், வாக்கு, கை, கால், மலத்தைத்தள்ளும் பாயு, ஆண் பெண் சேர்க்கைக்கருவியான உபஸ்தம் என்னும் ஐந்து கர்மேந்திரியங்களோடும் மனத்தின்மூலம் தொடர்புகொண்டு ஸ்பர்ஶித்தல், சுவைப்பது, காண்பது, முகர்வது, கேட்பது, பேசுவது, எடுப்பது, நடப்பது முதலான செயல்களைச் செய்கிறான் ஜீவன். ஆத்மாவாகிற ஜீவன் இவ்வண்ணமாக அறிபவனான ஜ்ஞாதாவாகவும், செயல்புரிபவனான கர்த்தாவாகவும் அநுபவிப்பவனான போக்தாவாகவும் ஆகிறான்: இப்படி ஆகும்போதும் ஈஶ்வரனுக்கு அதீனமாகவே இருக்கிறான். ஆயினும் ஒவ்வொரு நல்வினை தீவினைகளையும் புரியும்போதும் இறைவன் முதல் முயற்சியில் இவனுக்கு ஸ்வாதந்த்ர்யம் (free will) அளித்திருக்கிறானுகையால் அந்த நல்வினை தீவினைகளுக்கு ஸுகதுக்கங்களைப் பலனாகக் கொடுப்பதால் ஈஶ்வரனுக்குப் பக்ஷபாதம் கருணையின்மை முதலான தோஷங்கள் ஏற்படுவதில்லை. ஆத்மாக்கள்—எப்போதுமே கர்மஸம்பந்தமற்ற நித்யஸூரிகள் என்றும், ஒரு காலத்தில் கர்மஸம்பந்தம் நீங்கப்பெற்ற முக்தர்கள் என்றும், கர்மத்தாலும் அதுகாரணமாகவரும் தேஹத்தாலும் கட்டுப்பட்டவர்களான பத்தர்கள் என்றும் மூவகைப்படுவர். ஒவ்வொரு வகையினரும் கணக்கற்றவர். முதலிரண்டு வகையினரும் நித்யவிபூதியிலும், மூன்றுவது வகையினர் லீலாவிபூதியிலும் உள்ளனர். மூன்றுவது வகைப்பட்ட இவ்வுலகிலுள்ள ஜீவர்களுக்கு ஜடப்பொருளான ப்ராக்ருததேஹத்தின் தொடர்பாலே அஜ்ஞானம் முதலான தாழ்வுகள் ஏற்படுகின்றன. இந்த தேஹஸம்பந்தம் அடியோடு நீங்கும்போது இவர்கள் முக்தராகிறார்கள். அப்போதும் இவர்கள் ஈஶ்வரனோடு ஒன்றுவதில்லை. அவனோடு ஒத்த பல பெருமைகளை உடையவர்களாய், ப்ராக்ருத தேஹஸம்பந்தத்தால் வரும் தாழ்வுகள் அற்றவர்களாய், மறுபடியும் என்றும் ப்ராக்ருதமான தேஹத்தோடு தொடர்பு ஏற்படாத வாழ்வுநிலையை அடைகிறார்கள். சாஸ்திரங்களில் அசேதனப் பொருள்களை இறைவனோடு ஒன்றாக வழங்கியிருப்பதுபோலே, சேதனனான ஜீவனை இறைவனோடு ஒன்றாக வழங்கியிருப்பதும் இறைவன் அனைத்துக்கும் ஆத்மாவாகவும், மற்றவையனைத்தும் அவனை விட்டுப்பிரித்துக் காணமுடியாத சரீரமாகவுமிருக்கையாலேயேயாகும். ஆகையால் ஸம்ஸாரநிலையிற்போலே மோக்ஷநிலையிலும் ஜீவன் ப்ரஹ்மத்தோடு ஒன்றுவதில்லை. இது உயிர்கள்பற்றிய ராமானுஜநெறி.

http://acharya.org

4. வாழ்வு என்னும் முக்திநிலை

ராமாநுஜநெறியில் வாழ்வு எனப்படும் முக்திநிலை விளக்கப் படுகிறது. உயிராகிற ஜீவன் இறைவனாகிற ஸ்ரீமந்நாராயணனின் அருளாலே ப்ராக்ருத தேஹஸம்பந்தம் நீங்கப்பெற்று, நித்ய விபூதியாகிற பரமபதம் சென்று தாம் விரும்பிய வாழ்ச்சியைப் பெறுவது முக்திநிலை எனப்படுகிறது. உயிரானது பரமபதம் சென்று ஜ்ஞாநாநந்தமயமான தன் ஆத்மஸ்வரூபத்தையே சரீர மில்லாமல் என்றும் தான் தனி நின்று அநுபவித்துக்கொண்டிருக் கையாகிற கைவல்யம் எனப்படும் தாழ்ந்த மோக்ஷத்தையோ, அல்லது இறைவனான ஸ்ரீமந்நாராயணனை அடைந்து அப்ராக்ருத சரீரம்பெற்று அந்தமில் பேரின்பத்து அடியரான நித்யமுக்தர்க ளோடு கூடிநின்று அவனை அநுபவித்துப் பேரின்பமடைதல், அவனுக்குக் கைங்கர்யம்செய்து பேரின்பமடைதல், அவனுகப் பையே பயனாகக்கொண்டு அவனுக்கு அடிமைசெய்து அவன் முகமலர்த்திகண்டு பேரின்பமடைதல், அவனது அடியார்களது உகப்பையே பயனாகக்கொண்டு அவர்களுக்கு அடிமைசெய்து, அவர்கள் முகமலர்த்திகண்டு பேரின்பமடைதல் ஆகிய இவற்றில் தான் விரும்பியதொன்றைப் பெறும் தலைசிறந்த மோக்ஷத்தையோ இவ்வுலகில் தான் விரும்பியபடி அடை கிறான் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இத்தலைசிறந்த மோக்ஷமாகிற ஸாயுஜ்யமே 'பரமமோக்ஷம்' என்றும், 'நல்வீடு' என்றும் 'வீறுபெறுதுறக்கம்' என்றும் கூறப்படுகிறது. நித்ய ஸூரிகளுக்குப்போலே இவ்வுலகிலுள்ள பத்தஜீவர்களுக்கும் இத்தகைய நல்வீட்டை அருளித் தான் இன்புறவேண்டும் என்னும் ஆசையாலேயே ஸ்ரீமந்நாராயணன் ப்ரளயகாலத்தில் ஸூக்ஷ்மமான மூலப்ரக்ருதியெனும் அசேதனப்பொருளோடு கலந்து சரீரேந்திரியங்களற்றுக் கிடக்கும் ஜீவர்களுக்கு ஸ்ருஷ்டி காலத்தில் ஸ்தூலமான உடலையும் இந்திரியங்களையும் அளித்து, தன்னை அறிவிக்கும் சாஸ்திரங்களையும் அளித்து, தானும் நாட்டிற்பிறந்து படாதனபட்டு, ஞானிகளையும் அவதரிக்கச் செய்கிறான். இத்தகைய நல்வீட்டை விரும்பினால், இதை அடைவதற்கு ஒவ்வொரு ஜீவனுக்கும் உரிமையுண்டு என் கிறது ராமாநுஜநெறி. இந்த நல்வீட்டை அடைவதற்குப் பற்பல படிகளாகவே உலகிலுள்ள எல்லாச்சமயங்களையும் படைத்திருக்கிறான் என்பதும் ராமாநுஜநெறியின் உட்கருத் தாகும். பரமபதத்தில் ஸ்ரீமந்நாராயணனுக்கும், அவனுடைய அடியார்களுக்கும் கைங்கர்யம்செய்து பேரின்பப்பெறுவாழ்ச்சி பெறுவதற்காக முக்தஜீவன் இறைவனின் விருப்பத்தைப் பின் செல்லும் தன் விருப்பப்படி அப்ராக்ருதமான சரீரத்தை எடுத்துக்கொள்கிறான். ஈச்வரனுடைய திருமேனிபோலே இந்த

http://acharya.org

முக்தசரீரமும் நித்யவிபூதியிலுள்ள சுத்தஸத்வமுடைய அசேதனப்பொருளால் ஆனது. ஸத்வம் ரஜஸ்ஸு தமஸ்ஸு என்னும் முக்குணங்களுடைய ப்ராக்ருத சரீரம்போலே, இந்த சரீரம் ஜீவனுடைய ஜ்ஞாநாநந்தங்களைக் கட்டுப்படுத்தித் தாழ்த்தாது. இந்த சரீரத்தைக்கொண்டு எல்லா இடங்களிலும், எல்லாக்காலங்களிலும், எல்லா நிலைகளிலும் உசிதமான எல்லா விதமான கைங்கர்யங்களையும் செய்கிறான் பேரின்பப்பெருவாழ்வு பெற்ற முக்தன். இதுவே ஜீவஸ்வரூபத்திற்குத் தகுந்த பெருவாழ்ச்சியாகும். இக்கைங்கர்யத்தையும் தாஸனான தன் ஆனந்தத்திற்காக என்று எண்ணிச்செய்யாமல், ஸ்வாமியான அவனுடைய ஆனந்தத்திற்காகவே என்று எண்ணிச் செய்ய வேண்டும். ஸம்ஸாரமண்டலத்தில் இருக்கும்போது அவனுகப்புக்கேயான கைங்கர்யத்தைச் செய்ய ஆசைப்படுபவர்களுக்கே அத்தகைய பெருவாழ்வுகிடைக்கும் என்பதை "தனக்கேயாக எனைக்கொள்ளும் ஈதே எனக்கே கண்ணனை யான்கொள் சிறப்பே" என்று நம்மாழ்வாரும், "உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்று ஆண்டாளும் அருளிச்செய்தனர். உடைமையான ஜீவனை அடைந்து தான் இன்புறவேண்டும் என்பதே உடையவனான இறைவனின் விருப்பமாகையால், ஜீவன் மோக்ஷத்திலும் தன் ஆனந்தத்தை குறிக்கோளாகக் கொள்ளாமல் இறைவனின் ஆனந்தத்தையே குறிக்கோளாகக் கொள்வது தலைசிறந்தது. இத்தகைய மோக்ஷத்தையும் இறைவன் எவர்க்கும் நிர்ப்பந்தப்படுத்திக் கொடுப்பதில்லை. எவர்கள் இத்தகைய அடிமைசெய்ய ஆசைப்படுகிறார்களோ, அவர்களுக்கே இதை அருளுகிறான் இறைவன். ஆகையால் இவ்வடிமை இவ்வுலகில் தகாதவர்களுக்குச் செய்யும் அடிமை போலே துன்பத்தை விளைப்பதாயிராமல், உயிர்களுக்கு எல்லா உறவுமாயிருக்கும் இறைவன் விஷயத்தில் அவனுகப்புக்காகச் செய்யப்படுவதாகையால் பேரின்பப்பெருவாழ்வாயிருக்கிறது. ராமாநுஜநெறியின்படி உயிர்களுக்கு முக்தியை அளிப்பதற்கு உரியவன் திருமாலேயாவான். "மோக்ஷத்தை அளிக்கவல்லவன் புருஷோத்தமனே" என்று புருஷஸூக்தமும், "மோக்ஷத்தை ஜநார்த்தனனிடமிருந்தே பெறவேண்டும்" என்று ரிஷிகளும், "எருத்துக்கொடியுடையானும், பிரமனும், இந்திரனும் மற்றும் ஒருத்தரும் இப்பிறவி என்னும் நோய்க்கு மருந்தறிவாருமில்லை; மருத்துவனாய்நின்ற மாமணிவண்ணா" என்று பெரியாழ்வாரும், "மறுபிறப்பு அறுக்கும் மாசில்சேவடி மணிதிகழ் உருபின் மாஅயோயே" "நாறு இணர்த்துழாயோன் நல்கின் அல்லதை ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்" என்று சங்ககாலப் புலவர்களும் கூறிய அர்த்தத்தையே இவ்விஷயத்திலும் ராமாநுஜர் வலியுறுத்தினார் என்று விளங்குகிறது.

http://acharya.org

5. நெறி அல்லது உபாயம்

ராமாநுஜநெறியில் முற்கூறிய மோக்ஷநிலையை அடைவதற்கு நெறி எனப்படும் உபாயம்பற்றி விளக்கப்படுகிறது. உலகில் உள்ள மதங்கள் அனைத்திலும் உயிர்கள் முக்திநிலையாகிற பேரின்பம் அடைவதற்குப் பெருமுயற்சிசெய்யும் வழிகள் காட்டப்படுகின்றன. அதே ரீதியில் ஸ்ரீ ராமாநுஜரும் தமது ஸ்ரீ ப₄ாஷ்யம் கீ₃தாப₄ாஷ்யம் முதலான நூல்களில் உயிர்கள் மோக்ஷானந்த₃த்தைத் தாம் அடைவதற்குக் கர்மஜ்ஞான யோகங்களை அங்க₃மாகக்கொண்ட ப₄க்தியோகத்தை ஸாத₄னமாக அனுஷ்டிக்கவேண்டும் என்னும் வேதஶாஸ்த்ர நிர்ணயத்தைக் காட்டினார். இத்துடன் நில்லாமல், வேதசாஸ்திரங்களின் உட்கருத்தாய், உயிர்கள் அனைவரும் உய்வதற்கு வழியான சரணாக₃திநெறியையும் க₃த்₃யத்ரயம் என்று பெயர்பெற்ற மூன்று நூல்களிலும் காட்டினார் ராமாநுஜர். ஆழ்வார்கள் காட்டிய இந்த சரணாகதி நெறியை, ஸ்ரீ ரங்க₃நாதனின் முன்னிலையில் பங்குனி உத்திரச்சேர்த்தியன்று அருளிச்செய்யப்பட்ட இந்நூல்களில் தாமே தமக்காகவும் தம்மோடு தொடர்புகொண்டவர்களுக்காகவும் அனுஷ்டித்துக்காட்டினார். இதன் கருத்தை விளக்குவோம். தன் உடைமையான ஜீவனை அடைந்து தான் இன்புறவேண்டும் என்பது இறைவனின் விருப்பம். அதற்காக அவன் படைத்தல் அவதரித்தல் முதலான பல முயற்சிகளை அநாதி₃காலமாகச் செய்துகொண்டேயிருக்கிறான். ஜீவர்களோவெனில் அநாதி₃காலமாகச் செய்திருக்கும் பாபங்களின் பயனாகத் தமக்கும் இறைவனுக்கும் உள்ள இயற்கையுறவை உணராமல், இறைவன்கொடுத்த சுதந்திரமான அறிவைக்கொண்டு, அற்பமாய், நிலைநில்லாதவையான இவ்வுலக இன்பங்களைத்தேடி ஓடுகிறார்கள். பல சமயநெறிகளைக் காட்டிப் பல பிறவிகளில் இவர்களைப் படிப்படியாகத் திருத்தி, கடைசியில், தன்னை அடைவதே நல்வீடு என இவர்களை உணரவைக்கிறான். அப்போதும், ஜீவன் அவ்வீட்டை அடைந்து தான் இன்புறவிரும்பினால் பல பிறவிகளில் அவனைக் கர்மஜ்ஞாநப₄க்தியோகங்களை ஸாத₄னமாக அனுஷ்டிக்கச்செய்து, கடைசிவரையில் மோக்ஷத்தில் தான் ஆனந்தமடைய விரும்பித் தன் முயற்சியிலேயே நிலைநின்றால், அந்த ஸாதனத்தின் பலனாக மோக்ஷானந்தத்தை அவனுக்கு அளிக்கிறான். சில அறிவாளிகள் பின்வருமாறு சிந்திக்கிறார்கள்:— "இறைவன் நம்மோடு இயற்கையில் உறவுடையவன்; நம்மை அடைந்து தான் இன்புறுவதற்கு அநாதி₃காலமாகப் படாதபாடுபடுகிறான். நாமோ நமக்கு ஆனந்த₃த்தைப் பெறுவதற்காக அநாதிகாலமாகப் பாடுபட்டுவருகிறோம். உண்மையில் நம்மைப்பெற்று இறைவன் அடையும் ஆனந்த₃மே

http://acharya.org

நமக்குப்பேருகும். நாம் நமது ஆனந்த₃த்திற்காகப் பாடுபட்டு வருவதுதான் இறைவன் நிர்ஹேதுகமாக அருள்புரிந்து நம்மைத் தன்னை அடைவித்துக்கொள்வதற்கு இதுநாள்வரை தடையாயிருந்துவருகிறது. ஆகையால் மோக்ஷத்தில் நாம் ஆனந்தம் அடைவதைக் குறிக்கோளாகக்கொண்டு இங்கு பாடுபடுவதினின்றும் நீங்கி, அவனது ஆனந்த₃த்தையே குறிக்கோளாகக்கொண்டு, அவனையே நம்மை ரக்ஷிப்பவனாக உறுதிபூண்டு அவனுக்கும் அவனடியார்களுக்குமேயாக வாழ்ந்துவந்தோமானால், அவன் மோக்ஷத்தின்பொருட்டு நம்மிடம் எந்த முயற்சியையும் எதிர்பாராமல் (நிர்ஹேதுகமாக) நமக்கு மோக்ஷத்தை இப்பிறவியின் இறுதியில் அருளி, அவனுகப்புக்கேயான பேரின்பப்பெருவாழ்வை அருளுவான்" என்னும் ரீதியிலே அவ்வறிவாளிகளின் சிந்தனை செல்கின்றது. அதற்குத் தக்கபடி தாம் மோக்ஷமடைவதற்காகப் பாடுபடுவதினின்றும் நீங்கி, அவனையே அடையத் தக்க பொருளான உபேயமாகவும், அடைவிக்கும் வழியான உபாயமாகவும் கொண்டு அவனுக்கேயாக இப்பிறவியில் வாழ்ந்து, பரமபத₃த்தில் அவனுக்கேஆட்செய்யும் பேரின்பப்பெருவாழ்வை, ஒரு ஸாத₄நாநுஷ்டா₂னமில்லாமலேயே நிர்ஹேதுகமாகப் பெறுகிறார்கள். இவர்களுக்கு இறைவனே மோக்ஷோபாயமாவான். இத்தகையவர்களே ப்ரபந்நர்கள் என்றும் ஶரணாக₃தர்கள் என்றும் கூறப்படுகின்றனர். இவர்களது வாழ்க்கை முறையான சரணாகதிநெறியே தலைசிறந்த முக்திவழியாகும் என்று க₃த்₃யத்ரயத்தில் காட்டினார் ராமாநுஜர். "கண்ணனல்லால் இல்லை கண்டீர் சரண்" என்று நம்மாழ்வார் காட்டிய வழி இதுவே. இப்படி இறைவனையே உபாயமாகவும் உபேயமாகவும் உறுதிபூண்டு வாழ்க்கை நடத்த இயலாதவர்கள் அத்தகைய உறுதியுடைய ஓர் ஆசாரியனின் அபிமானத்திற்குப் பாத்திரராக வாழ்ந்தால், அதனாலும் பேரின்பப்பெருவாழ்வை மிக எளிதில் பெறலாம் என்றும் உபதேசித்தார் ராமாநுஜர். இதுவே மதுரகவியாழ்வாரால் 'கண்ணி நுண் சிறுத்தாம்பு' என்னும் திவ்யப்ரபந்தத்தில் காட்டப்பெற்ற தொல்வழி. இத்தொல்வழியின்மூலம் பிற்காலத்தில் உள்ளவர்களும் உய்வதற்காக 74 ஆசார்யபீடங்களாகத் தம் சிஷ்யர்களில் தலைசிறந்தவர்களை நியமித்து, பரம்பரை பரம்பரையாக இந்நெறிகளைப் பரப்பிவர ஏற்பாடுசெய்தார் ராமாநுஜர். உலகிலுள்ள எல்லா உயிர்களும் பேரின்பப்பெருவாழ்வுபெற்று உய்யவேண்டும் என்னும் பெருங்கருணையாலே, ஆழ்வார்களை அடியொற்றி மிக எளிய வழிகளை எக்காலத்திற்கும் அமைத்துக் கொடுத்த ஸ்ரீ ராமாநுஜரை "காரேய் கருணை இராமானுச" என்று இராமானுச நூற்றந்தாதியில் அமுதனார் கொண்டாடியது மிகையில்லையன்றோ.

http://acharya.org

6. தடை

பேரின்பப் பெருவாழ்வை இஃவுலகிலுள்ள உயிர்கள் அடையத் தடையாயிருப்பவை பற்றிய ராமாநுஜநெறி விளக்கப்படுகிறது. இறைவனைப்போலே என்றுமிருக்கும் இவ்வுலகிலுள்ள உயிர்களுக்கு அநாதி₃காலமாக உண்டான ப்ராக்ருதமான சரீரங்களோடுள்ள தொடர்பால், தம்மைப்பற்றிய உண்மையறிவு மழுங்கிக் கிடக்கிறது. இதனால் இவர்கள் தே₃ஹத்தையே தாமாகவும், தம்மைச் சுதந்திரராகவும் எண்ணிவிடுகின்றனர். இது அவித்₃யை அல்லது அஜ்ஞானம் எனப்படும். இந்த அஜ்ஞானத்தினால் இவர்கள் அற்பமாய், நிலைநில்லாதவையான இவ்வுலக இன்பங்களை விரும்பி, அவற்றைப் பெறுவதற்காக நற்செயல்களையும் தீச்செயல்களையும் செய்து வருகிறார்கள். இறைவன் இவர்களுக்குக் கொடுத்துள்ள சுதந்திர அறிவைக்கொண்டு இவர்கள் செய்யும் நற்செயல்களால் இறைவனுக்கு இவர்களிடம் பிரீதியும், தீச்செயல்களால் இவர்களிடம் கோபமும் உண்டாகிறது. அந்தப் பிரீதியானது புண்யம் என்று பெயர்பெறுகிறது. இதனால், இவர்கள் விரும்பும் இவ்வுலக இன்பங்களை அளிக்கின்றான் இறைவன். அந்தக் கோபம் பாபம் என்று பெயர்பெறுகிறது. இதனால் இவர்களுக்குத் துன்பங்களை அளிக்கின்றான் இறைவன். ஒவ்வொரு ஜீவனும் அநாதி₃காலமாகக் கணக்கற்ற புண்ய பாபங்களைச் சேர்த்து வைத்திருக்கிறான். இப்புண்ய பாபங்கள் மேன்மேலும் இவ்வுலக இன்பங்களை விரும்பச்செய்து நற்செயல் தீச்செயல்களிலே மூட்டி ஒன்று பத்து நூறாயிரமாகப் புண்யபாபங்களை வளர்த்து வருகின்றன. இதனால் இவ்வுலக இன்பங்களிலேயே வாஸனை எனப்படும் பழக்கம் உண்டாகிவிடுகிறது. அதனால் அவற்றையே மேலும் மேலும் விரும்பவைக்கும் ருசியும் உண்டாகி விடுகிறது. இப்படி சங்கிலித் தொடர்போலே உண்டாகும் உடல்களோடு ஸம்பந்தம், அஜ்ஞானம், புண்ய பாபகர்மங்கள், வாஸனை, ருசி ஆகியவை, இவனுக்கு மேலும் மேலும் மேலும் பல பிறவிகளையும் அவற்றில் பல உடல்களோடு தொடர்பையும் ஏற்படுத்திக்கொண்டேயிருக்கிறது. அவித்யை எனப்படும் அஜ்ஞானம், கர்மம், வாஸனை, ருசி, ப்ரக்ருதிஸம்பந்தம் எனப்படும் உடல்களோடுள்ள தொடர்பு ஆகியவை— நம்மைப்பற்றியும், இறைவனைப் பற்றியும் உணரமுடியாதபடி செய்துவிடுகின்றன. இவையே நாம் பேரின்பப் பெருவாழ்வை அநாதி₃காலமாகப் பெறமுடியாமல் தடுத்துவரும் தடைகள். இவை—நாஸ்திகவாத₃ம் முதலானவை செய்து இறைவனிடத்திலேயே அபசாரப்படும்படியாகவும், அவனடியார்களிடத்திலே

http://acharya.org

அபசாரப்படும்படியாகவும், அவனையும், அவனடியார்களையும் மிகவும் துவேஷிக்கும்படியாகவுங்கூடச் செய்துவிடும். இவை இறைவனை அடைவதற்குப் பெரிய தடைகள். இப்படிக் கணக்கற்ற தடைகள் இருந்தபோதிலும் இறைவன் தான் செய்யும் முயற்சிகளாலே தற்செயலாக இவர்களுக்கு நேரிடும் புண்யங்களை ஒன்று பத்து நூறுயிரமாக வளரச்செய்து புண்யங்களாலே பாபம் குறையப்பெற்றவர்களுக்குத் தன்னை உணர வைக்கிறுன். அவனை உணர்ந்து முற்கூறிய வழிகளாலே ஒரு சில ஜீவர்கள் முற்கூறிய தடைகள் அடியோடு நீங்கப்பெற்று, தாம் விரும்பிய முக்திநிலையை அடைகின்றுர்கள் என்கிறது ராமாநுஜநெறி. ஆக, இறைநிலை, உயிர்நிலை, வாழ்வு, நெறி, தடை ஆகியவை பற்றிய ராமாநுஜநெறி இதுகாறும் விளக்கப்பட்டது.

முடிவுரை

ஸ்ரீராமாநுஜர் அருளிய நூல்கள் ஒன்பது. வேதவ்யாஸர் அருளிய ப்ரஹ்மஸூத்ரத்திற்கு வ்யாக்யானமாய் அமைந்தவை ஸ்ரீபாஷ்யம், வேதாந்ததீபம், வேதாந்தஸாரம் எனும் மூன்று நூல்கள். உபனிஷத் வாக்யங்களை அலசி ஆராய்ந்து உபனிஷத்துக்களின் கருத்தைத் தெளிவுபடுத்துவது வேதார்த்த ஸங்க்ரஹம் எனும் நூல். கண்ணன் அருளிய கீதைக்கு உரையாக அமைந்தது கீதாபாஷ்யம் எனும் நூல். சரணுகதி நெறியை விளக்குபவை கத்யத்ரயம் எனும் மூன்று நூல்கள். ஸர்வேச்வரனுன ஸ்ரீமந்நாராயணனுக்கு ஆராதனம் செய்யும் முறையை விளக்குவது நித்யக்ரந்தம் எனும் நூல். நவரத்னங்கள் போன்ற இவ்வொன்பது நூல்களும் வடமொழியில் அமைந்தவை. ஸ்ரீராமாநுஜருடைய பரம்பரையில் ஓரிரு நூற்றுண்டுகளுக்குள் வந்த பல மஹாசார்யர்கள் திவ்யப்ரபந்தங்களுக்குத் தாம் அருளிய ஈடு முதலான வ்யாக்யானங்களில் ஸ்ரீராமாநுஜர் அப்பிரபந்தப் பாசுரங்களுக்குக் காட்டிய விளக்கங்களை ஆங்காங்கு அழகிய தமிழில் பொறித்து வைத்திருக்கிறுர்கள். இவையனைத்தையுங்கொண்டு ராமாநுஜர் காட்டிய நெறி இங்கு சுருக்கமாக விளக்கப்பட்டது. இவற்றிலிருந்து, ராமாநுஜர் நிலைநாட்டிய விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவநெறி—வேதகாலம் முதல் பாரதநாட்டிலும், சங்ககாலம் முதல் அதன் பகுதியான தமிழ்நாட்டிலும் நிலவிவந்த இருமொழி ஒருமைப்பாட்டுநெறியே என உணரலாம்.

[இது, திருச்சி வானொலியில் 25—7—77 முதல் 30—7—77 முடியக் காலையில் நெறிவிளக்கத் தொடரில் ஒலிபரப்பானது.]

http://acharya.org